பக்கங்கள் 17 + 05

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 17 சனிக்கிழமை 30.03.2024 அதிர்வு 243

## வெற்றுக் காணியில் குடும்பஸ்தரின் சடலம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், இளவாலை – வசந்த புரம் பகுதியில் தனியாக வசித்து வந்து குடும்பஸ்தர் ஒருவர் வெற்றுக் 04



### இனியும் தாமதிக்காது ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும்

# தமிழ் பொது வேட்பாளர் பற்றி தமிழரசு முடிவெடுக்கவில்லை

### யாழில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

"தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் எமது இலங்கைத் தமிழரசுக் கட்சி எந்தவொரு நிலைப்பாட்டையும் எடுக்க வில்லை. முதலில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட வேண்டும். யார், யார் வேட்பாளர்கள் எனத் தெரிய வேண்டும். அதைத் தொடர்ந்து நாங்கள் கலந் துரையாடி முடிவெடுப்போம்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 04

# மே தினக் கூட்டத்தோடு பிரசாரப் போர் ஆரம்பம்

மே தினக் கூட்டத்தோடு தேர்தல் பிரசார நடவடிக்கையை முழுவீச்சுடன் முன்னெடுப்பதற்கு தென்னிலங்கையில் உள்ள பிரதான அரசியல் கட்சிகள் வியூகம் வகுத்து வரு கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி என்பன தற்போது தொகுதி கூட்டங்களையும், மகளிர், இளைஞர் மாநாடுகளையும் நடத்தி வருகின்றன.

விமல் வீரவன்ச அணி, நிமல் லான்சா அணி என்பனவும் மக்கள் சந்திப்புக்களை நடத்தி வருகின்றன.

இந்நிலையில் மே தினக் கூட்டத்தை மிகவும் பிரமாண்டமாக நடத்திப் பலத்தைக் காட்டுவதற்கும் கட்சிகள் தயாராகி வருகின்றன. இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.



அடுத்து என்ன தேர்தல் என்பது தொடர்பான அறிவிப்பு தமிழ், சிங்கள புத்தாண்டு முடிந்த பின்னர் அதிகாரபூர்வமாக வெளியாகும் எனத் தெரியவருகின்றது. 04




# மன்னாரிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் தமிழகத்தில் அகதிகளாகத் தஞ்சம்!

(ந.லோகதயாளன்)

மன்னாரிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

மன்னாரிலிருந்து படகில் சென்று தனுஸ்கோடியின் முதலாவது தீடையில் தரையிறங்கிய அகதிகளை அவதானித்த தமிழக மீனவர்கள், தமிழகக் கரையோரக் காவல்படையினருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இந்தத் தகவலின் அடிப்படையில் கடலுக்குச் சென்ற கரையோரக் காவல் படையினர் நால்வரையும் மீட்டு தனுஷ்கோடியில் வைத்து இராமேஸ்வரம் மரையன் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அவர்களைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளின் பின்னர் மண்டபம்




அகதி முகாமில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இவ்வாறு அகதிகளாகச் சென்றவர்கள் மன்னார் – திருக்கேதீஸ்வரம் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் இரு பிள்ளைகள் என்பது குறிப்பிடத் தக்கது.

# தம்பதி மீது கோடரித் தாக்குதல் மனைவி சாவு; கணவன் காயம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 85 ஆம் கட்டைப் பகுதியில் மது போதையில் இருந்த நபர் ஒருவர், தம்பதியினரைக் கோடரியால் தாக்கியதில் மனைவி உயிரிழந்துள்ளார். கணவன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அக்போபுர, 85 ஆம் கட்டைப் பகுதியில் மதுபோதையில் ஒருவர் சத்தம் போட்டுக் கொண்டிருந்த வேளை மேற்படி நபரின் வீட்டுக்கு அருகில் உள்ள வர்கள் சத்தம் போட வேண்டாம் எனக் கூறினர். இதனால் கோபமடைந்த மேற்படி நபர் அருகிலுள்ள வீட்டுக்குச் சென்று அங்கிருந்த கணவன் மற்றும் மனைவியைக் கோடரியால் தாக்கினார்.



சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் கந்தளாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மனைவி உயிரிழந்தார். கணவன் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

அக்போபுர, 85 ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த சிரோமாலா பெர்ணாந்து (வயது 44) என்ற பெண்ணே உயிரிழந்தார்.

கோடரியால் தாக்கினார் எனக் கூறப்படும் அதே பகுதியைச் சேர்ந்த ஏ.டபிள்யூ.எம். விக்ரமசிங்க (வயது 54) என்ற சந்தேகநபரைக் கைது செய்த அக்போபுர பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சர்வதேசம் இனியும் கண்மூடித்தனமாக இருக்காமல் எமக்கான நீதியை விரைந்து பெற்றுத்தர வேண்டும்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் போராட்டம்

(கே.வசந்தன்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் சர்வதேச நீதி கோரி இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக காலை 10 மணிக்குப் போராட்டம் ஆரம்பமானது.

"குற்றமிழைத்த நாட்டில் எமக்கான நீதி கிடைக்கப்பெறாது. இதனால் சர்வதேச நீதி கோரி நாம் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். எனவே, சர்வதேசம் இனியும் கண்மூடித்தனமாக இருக்காமல் எமக்கான நீதியை விரைந்து பெற்றுத்தர வேண்டும்.

எமது போராட்டங்களை நீர்த்துப்போகச் செய்வதற்காகப் பல அமைப்புக்கள் முற்படுகின்றன. எனவே, குற்றம் இழைத்தவர்களைச் சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்தி எமக்கான நீதியை வழங்க வேண்டும். அதுவரை நாம் போராடிக்கொண்டே இருப்போம்." – என்று போராட்டத்தில் ஈடுபட்ட உறவினர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டோர், "ஓ.எம்.பி. கண்துடைப்பு நாடகம், சர்வதேச விசாரணையே எமக்குத் தேவை, 12 ஆணைக்குழுக்கள் அமைத்தும் பயன் இல்லை" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு பல்வேறு கோஷங்களை எழுப்பியிருந்தனர்.













# சக்தி தொலைக்காட்சியில் இன்று முதல் 'Shakthi Crown'

சக்தி தொலைக்காட்சியின் மற்றுமொரு மாபெரும் படைப்பாக இலங்கை வாழ் இளம் கலைஞர்களை உலகறியச் செய்யும் முயற்சியாக, தமிழ் இசைத் துறையின் மறுமலர்ச்சியாக முற்றிலும் மாறுபட்ட இசை Reality நிகழ்ச்சியாக இன்று (மார்ச் 30ஆம் திகதி) முதல் அறிமுகமாகின்றது 'Shakthi Crown'

இலங்கையின் முதற்தர தமிழ் தொலைக்காட்சியாக விளங்கும் சக்தி தொலைக்காட்சி கடந்த காலத்தில் மக்களை மகிழ்விக்கவும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் பல புதுமையான நிகழ்ச்சிகளைத் தயாரித்து வெளியிட்டுள்ளது. எப்போதும் சக்தி தொலைக்காட்சி தயாரிக்கும் நிகழ்வுகள் நம் நாட்டு இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள், பெரியவர்கள் என அனைவரையும் ஒன்றிணைத்து அவர்களுக்குள் புதைந்து கிடக்கும் திறமைகளையும் அவர்களின் போராட்டத்தையும் வெளிக்காட்டி அவர்களைப் புதிய வழியில் இட்டுச் செல்வ தாகவே அமைந்துள்ளது.

கடந்த 25 வருடங்களில் சக்தி தொலைக்காட்சி உருவாக்கிய நிகழ்வுகளும், சக்தி வாய்ப்பளித்த கலைஞர்களும் இன்றும் என்றும் மக்கள் நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

Shakthi Crown எனப்படும் இந்தப் புதிய முயற்சி நம் நாட்டில் பாடும் திறமைகளை வெளிக்கொணர்வதற்காக




வித்தியாசமாகவும் சர்வதேச தரத்திலும் உருவாக்கப்படும் ஒரு Reality நிகழ்ச்சியாகும். 43 அத்தியாயங்கள் கொண்ட இந்த நிகழ்ச்சி இன்று (மார்ச் 30 ஆம் திகதி) முதல் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் இரவு 8.30 மணிக்கு இல்லத்திரை சக்தியை அலங்கரிக்க வுள்ளது.

இன்றைய சூழ்நிலையில் ஒரு நிகழ்ச்சியின் நோக்கமும் அதன் உள்ளடக்கமும் எவ்வளவு முக்கியமோ அதே அளவு அந்த நிகழ்ச்சியின் உருவாக்கமும் இருக்க வேண்டும். அந்த வகையில் இந்த அழகிய நிகழ்வை Capital Maharaja குழுமத்தின் ஓர் அங்கமாகவும் Stein கலையகம் உருவாக்கவுள்ளது.

சக்தி தொலைக்காட்சியின் 25 வருட அனுபவமும் Stein கலையகத்தின் உலகத் தரமும் இணைந்து இந்த நிகழ்ச்சியை மிகச் சிறந்த முறையில் மக்களிடம் கொண்டு சேர்க்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

Shakthi Crown தமிழ் இசைத்துறையின் மறுமலர்ச்சி. இந்தப் புதிய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள இன்று முதல் சனி மற்றும் ஞாயிறு இரவு 8.30 மணிக்கு சக்தி தொலைக்காட்சியுடன் இணைந்துகொள்ளுங்கள்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வெற்றுக்....

காணி ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கீரிமலைப் பகுதியைச் சேர்ந்த ஐயங்கன் சிவானந்தராஜா (வயது 47) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபர், அவரது குடும்பத்தவர்களுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இரண்டு மாதங்களுக்கு முன்னர் அவர்களைப் பிரிந்து வந்து, இளவாலை - வசந்தபுரம் பகுதியில் உள்ள காணியில் குடிசை ஒன்றை அமைத்து தனியாக வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், அவரது குடிசைக்கு அருகாமையில் உள்ள வெற்றுக் காணி ஒன்றிலிருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## தமிழ் பொது....

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மக்கள் ஆணையற்ற ஜனாதிபதியே தற்போது நாட்டில் இருக்கின்றார். எனவே, சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியம்.

அத்தோடு தற்போது உள்ள மக்கள் ஆணையில்லாத நாடாளுமன்றம் வெகுவிரைவில் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சொல்வது ஒன்று, செய்வது இன்னொன்றாக இருக்கின்றது. எனவே, நடத்த வேண்டிய தேர்தல்களைக் கூட நடத்தாமல் இருக்கின்ற இந்த ஜனாதிபதி இனியும் தாமதிக்காது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்." - என்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பிலிருந்து பொது வேட்பாளராக ஒருவரை நிறுத்துவதற்குப் பேசப்பட்டு வருவது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குச் சுமந்திரன் எம்.பி. பதிலளிக்கும்போது,

"இலங்கைத் தமிழரசுக் கட்சி இதைப் பற்றி இன்னமும் கலந்துரையாடவில்லை. தேர்தல் அறிவிக்கப்படுகின்றபோது இது சம்பந்தமாகக் கலந்துரையாடி முடிவெடுப்போம்.

மேலும், பொது வேட்பாளரோ அல்லது தனி வேட்பாளரோ அது எவருக்கும் இருக்கின்ற உரிமை. யாரும் தேர்தலில் போட்டியிடலாம். எவரையும் போட்டியிடக் கூடாது என்று சொல்லுகின்ற உரிமை எவருக்கும் கிடையாது.

இந்தத் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் எமது தமிழரசுக் கட்சி எந்தவொரு நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை. முதலில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட வேண்டும். யார், யார் வேட்பாளர்கள் எனத் தெரிய வேண்டும். அதைத் தொடர்ந்து நாங்கள் கலந்துரையாடி முடிவெடுப்போம்." - என்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்குவார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளமை தொடர்பில் சுமந்திரன் எம்.பியிடம் கேட்டபோது,

"அவர் மட்டுமல்ல ஒவ்வொரு கட்சியினரும் எல்லா மக்களின் வாக்கும் தங்களுக்குத்தான் என்று சொல்லுவார்கள். ஆகையினால் அதையெல்லாம் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டிய தேவையில்லை. எனவே, யாருக்கு வாக்களிப்பது என மக்கள் தீர்மானிப்பார்கள்." - என்று பதிலளித்தார்.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் தமிழ்க் கட்சிகளைச் சந்தித்து ஆதரவைக் கோரவுள்ளதாக அறிவித்துள்ளமை தொடர்பில் சுமந்திரன் எம்.பியிடம் கேட்ட போது,

"அடுத்த வாரம் அவர்கள் எம்மைச் சந்திக்கவுள்ளதாகக் கூறினார். அவர்களோடு மட்டுமல்ல ஏனைய பல கட்சிகளுடனும் நிறைய சந்திப்புக்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், ஜனாதிபதித் தேர்தல் என்று வருகின்றபோது அதில் யார், யார் வேட்பாளர்கள் என அறிவிக்கப்படுகின்றபோது நாங்கள் உரிய சந்திப்புக்களை மேற்கொண்டு முடிவைத் தீர்மானிப்போம். இவ்வாறான நிலைமையில்தான் தேசிய மக்கள் சக்தியினர் எம்மைச் சந்திக்கப் போவதாகச் சொல்லியுள்ளனர். எனவே, எம்மைச் சந்திக்க வருகின்ற எல்லோரையும் நாங்கள் சந்திப்போம்." - என்று பதிலளித்தார்.

## மே தினக்....

முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படவுள்ளது. இதற்கான முடிவை ஜனாதிபதி எடுத்துவிட்டார் என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

எனவே, மே தினக் கூட்டத்தைப் பிரமாண்டமாக நடத்தி, அன்று முதல் தேர்தல் பிரசாரத்தையும் தீவிரப்படுத்த கட்சிகள் திட்டமிட்டுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு தொகுதி அமைப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அரசியல் கூட்டணிகளும் அடுத்த மாதம் முதல் மலரவுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணி ஏப்ரல் 5 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.



# நிறுத்திவைக்கப்பட்டுள்ள இழுவைப் படகுகளால் மயிலிட்டி துறைமுகத்தில் படகுகளுக்கு அசௌகரியம்

## தீர்வு வழங்கும் நடவடிக்கையில் அமைச்சர் டக்ளஸ்

மயிலிட்டி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இழுவைப் படகுகளால் துறைமுகத்தில் கடற்றொழிலாளர்கள் படகுகளை கரைசேர்ப்பது மற்றும் எரிபொருள் நிரப்புவது போன்ற செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருகின்றன எனவும் அதற்கு நிரந்தர தீர்வை பெற்றுத்தருமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த துறைமுகத்தில் தொடர்ந்து வரும் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரின் பார்வைக்கு கொண்டுவரப்பட்டிருந்த நிலையில் இன்றைய தினம் மயிலிட்டி இறங்குதுறைப் பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிலைமைகளை ஆராய்ந்தார்.



மேலும், மயிலிட்டி இறங்குதுறை பகுதியில் அதிகளவான நீண்டநாள் தொழில் மேற்கொள்ளும் ரொலர் படகுகளும் மீன்பிடி படகுகளும் தரித்து நிற்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

ஆனாலும், அவை நாளாந்தம் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படகுகள் எதிபொருள் நிரப்புவதிலும் படகுககளை கரை சேர்ப்பதிலும் பல அசௌகரியங்களை ஏற்படுத்தி வருகின்றன.

இவ்வாறான பிரச்சினைகள் தொடர்ந்து வருவதால் அவற்றை ஒழுங்கபடுத்தி கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு இறங்குதுறையின் செயற்பாடுகளை இலகுபடுத்தி தருமாறு கடற்றொழிலாளர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், மயிலிட்டி துறைமுகத்தில் சட்டவிரோதமாக இலங்கை எல்லைக்கள் நுளைந்த குற்றச்சாட்டில் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இந்திய இழுவைப் படகுகளாலும் துறைமுகத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருகின்றன என சுட்டிக் காட்டியிருந்தனர்.

நிலைமைகளை அவதானித்த அமைச்சர், அவ்வாறு தரித்து நிறுத்தப்பட்ட படகுகளை ஆழமான பகுதியில் நிறுத்தி வைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும், தொழில் மற்றும் எரிபொருள் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வருகைதரும் படகுகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாத விகையில் பொறிமுறையை வகுத்து தீர்வுகளை காணுமாறும் துறைசார் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

இதேவேளை, தடைசெய்யப்பட்ட சுருக்குவலை தொழில் நடவடிக்கைகளும் இப்பகுதியில் அதிகரித்து வருவதாகவும் அவற்றையும் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அமைச்சரிடம் கடற்றொழிலாளர்கள் கோரியிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்திய அமைச்சர், அவ்வாறான தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்க கூடாதெனவும் அவ்வாறு செயற்படும் தரப்பினரை தடுப்பதுடன், அவர்களை சட்டத்தின் முன்நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் உரிய தரப்பினருக்கு உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# சீனக் கடன் பொறி

இலங்கைக்கு அதிக அளவில் கடன் வழங்கிய நாடு சீனாதான். இலங்கை சீனாவிடம் கடன்களை வாங்கில் குவித்த போது ஒரு விடயம் பல தரப்புகளினாலும் சுட்டிக் காட்டப்பட்டு வந்தது. சீனா வழங்குவது கடன் உதவி அல்ல, அது கடன்பொறித் திட்டம் என்று விவரிக்கப்பட்டது.

'விளக்கில் வீழும் விட்டில் பூச்சி போல' சீனாவின் கடன் பொறியில் சிக்கி இலங்கை அந்தரிக்கப் போகின்றது என அப்போதெல்லாம் எச்சரிக்கப்பட்டது.

அதுவும் சீனா வழங்கும் கடனுதவித் திட்டங்கள் நாட்டிற்குப் பொருளாதார வருமானத்தை அதிகரிக்கச் செய்ய மாட்டா, அதற்குப் பதிலாக நாட்டின் நிதிக் கடப்பாட்டை - கடன் சுமையை - பொறுப்பை - அதிகரிக்க மட்டுமே செய்யும் என்று அவ்வப்போது அத்தரப்புகளினால் முன்னெச்சரிக்கை வழங்கப்பட்டே வந்தது. ஆனால் இலங்கை அந்த ஆலோசனையைச் செவிமடுக்கவில்லை.

அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தளை சர்வதேச விமான நிலையம் என்று பொருளாதார லாபத்தை தராத வெறும் வெள்ளை யானைத் திட்டங்களுக்கு நிதியைக் கொட்டிச் செலவழிக்க கடனை வாரித் தந்து உதவியது சீனா.

அந்தக் கடன்களுக்குரிய வட்டியைச் செலுத்துவதற்கான வருமானத்தைக் கூட அந்தத் திட்டங்கள் இலங்கைக்குத் தரவில்லை.

கடைசியாக அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திக்காக சீனாவிடம் இருந்து பெற்ற கடனை சமாளிப்பதற்கு வேறு வழியின்றி அந்த துறைமுகத்தையே 99 வருடங்களுக்கு சீனாவுக்கு தாரை வார்க்க வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு நேர்ந்தது.

வாங்கிக் குவித்த கடன்களால் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு, கடனிறுக்க வழியற்ற வங்குறோத்து நாடு என்ற நிலையை இலங்கை அடைந்துள்ளது. இந்த நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டு பிணையெடுப்பதற்கு உதவும் நோக்கோடு சர்வதேச நாணய நிதியம் முன் வந்திருக்கின்றது. அதற்காக, இலங்கை தான் முன்னர் வாங்கிய வெளிநாட்டுக் கடன்களை மீள் செலுத்துவது தொடர்பாக அந்தந்த நாடுகளுடன் மறுசீரமைப்பு ஒழுங்குகளுக்கு - ஏற்பாடுகளுக்கு - வர வேண்டும் என்று நாணய நிதியம் வலியுறுத்துகின்றது. அப்படியே ஏனைய நாடுகள், தரப்புகள் எல்லாம் இலங்கையுடன் ஓர் ஒழுங்கு முறைக்கு வந்து விட்டன.

ஆனால் இலங்கைக்கு அதிக அளவில் கடன்களை வாரி வழங்கிய சீனா மட்டும் அதற்கான இணக்கத்துக்கு வராமல் பிகு பண்ணி குழப்பிக் கொண்டு நிற்கின்றது.

இலங்கை சீனாவிடமிருந்து 26.4 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை பெற்றுள்ளது எனக் கூறப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்குப் பின்னர் அந்தக் கடன் தொகையை மீள செலுத்தாதிருப்பதற்கு 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி முதல் இரண்டு வருடகால அவகாசத்தை சீனா வழங்கியிருந்தது.

அது வரும் ஏப்ரல் 12 ஆம் திகதியுடன் - அதாவது இன்னும் இரண்டு வாரங்களில் - நிறைவடையவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதன் பிரகாரம் கடன் தொகையை மீள செலுத்தும் நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு சீன அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளதாக அறியமுடிகிறது.

மீண்டும் சலுகைக் காலத்தை நீடிக்குமாறு இலங்கை கோரிய போதிலும், அதற்கு சீனா இணங்கவில்லை என்று தெரிகின்றது. அவ்வாறு இலங்கைக்கு சலுகை வழங்கும் நிலையில் ஏனைய நாடுகளும் இதேபோன்று கடன் சலுகைக் காலத்தை கோரும் என சீனா தெரிவித்துள்ளதாம்.

உலக நாடுகள் பல சீனாவுக்கு சுமார் 600 பில்லியன் அமெரிக்க டொலர் கடன்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பின்னணியில், கடன் தொகையை செலுத்துவதற்கு இலங்கைக்கு மாத்திரம் விசேட கால அவகாசம் வழங்கப்படுமாயின், ஏனைய நாடுகளும் இதே கோரிக்கையை முன்வைக்கும் சாத்தியம் காணப்படுவதாகவும், இவ்வாறு நடக்குமாயின் அது தனக்குக் கடுமையான நெருக்கடியை தோற்றுவிக்கும் எனவும் சீனா சுட்டிக்காட்டியுள்ளது.

ஏப்ரல் மாதம் முதல் கடனை மீள செலுத்த ஆரம்பிக்குமாறு இலங்கையை வலியுறுத்தும் சீனா, அதன் பின்னர் ஆண்டின் நடுப்பகுதியில் சற்று நிவாரணம் வழங்குவது குறித்துப் பரிசீலிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளது என்றும் கூறப்படுகின்றது

இந்தப் பின்புலத்தில்தான் இலங்கைப் பிரமர் தினேஷ் குணவர்தனவின் தற்போதைய சீன விஜயம் கடன் நிவாரணத்தை மேலும் நீடிப்பதற்கான வலியுறுத்தலை நேரில் தெரிவிப்பதற்காகவா என்ற கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

எது, எப்படி என்றாலும் சீனக் கடன் பொறியில் மாட்டியுள்ள இலங்கை அதில் இருந்து மீண்டு வெளியே வருவது என்பது சுலபமான விடயம் அல்ல.



# ‘என் கனவு யாழ்’ இலவச கற்கை நிலையம் சாவகச்சேரியில் திறந்து வைக்கப்பட்டது

(த.சுபேசன்)

காலத்தின் தேவைக்கேற்ப தொழில்நுட்ப அறிவு கொண்ட எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் நோக்கில் ‘என் கனவு யாழ்’ செயற்திட்டத்தின் கீழ் டி.பி. எடியுகேசன் நிறுவனத்தால் சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட இலவச கற்கை நிலையம் நேற்று மாணவர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

மீசாலை சோலை அம்மன் ஆலய பிரதம குரு கிருபானந்தக் குருக்களின் ஆசியுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக .என் கனவு யாழ். அறக்கட்டளையின் ஸ்தாபகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு இலவச கற்கை நிலையத்தை திறந்து வைத்திருந்தார்.

மேலும் நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் க.கந்தசாமி, யா. போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் தி.அபராஜிதன், ஆசிரிய ஆலோசகர் வீரசுதாகர், ஆசிரியர் தீபன், சாவகச்சேரி ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய உபதலைவர் பரமநாதன், சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் கு.பரமானந்தம் மற்றும் என் கனவு யாழ் செயற்திட்டத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ். உதய சீலன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்த நிகழ்வின் ஓர் அங்கமாக கற்கைநெறிக்கு விண்ணப்பித்த 800 இற்கும் அதிகமாக மாணவர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

‘என் கனவு யாழ்’ செயல் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் எட்டாவது இலவச கற்கை நிலையமாக சாவகச்சேரியில் மேற்படி கற்கை நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
















# கல்முனை கடற்கரைப் பகுதிகளில் சுத்திகரிப்பு வேலைத்திட்டம்

(அஸ்லம் எஸ். மௌலானா)

சர்வதேச கழிவுகளற்ற தினத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கடற்கரைப் பகுதிகளில் இன்று விசேட சுத்திகரிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியின் பணிப்புரை மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீமின் ஆலோசனை, வழிகாட்டலின் கீழ் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.எம்.எம். பயாஸின் மேற்பார்வையில் திண்மக்கழிவகற்றல் பிரிவினரால் இந்தச் சுத்திகரிப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் கழிவுகள் யாவும் அகற்றப்பட்டன.

றமழான் நோன்பு காலத்தில் மிகவும் அர்ப்பணிப்புடன் இப்பணிகளை சிறப்பாக மேற்கொண்ட அனைத்து ஊழியர்களுக்கும் மாநகர ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸ்மி நன்றி தெரிவித்துள்ளார்.











# சொறிக்கல்முனையில் திருச்சிலுவைப் பாதை

**(வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கு மாகாணத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பழம்பெரும் திருத்தலமான சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தலத்தில் இயேசுவின் பாடுகளை நினைவுகூரும் திருச்சிலுவைப் பாதை பெரிய வெள்ளிக்கிழமை நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கிறிஸ்தவ பக்தர்கள் இயேசு சிலுவையில் அறையப்பட்டதை நினைவுகூரும் வகையில் சிலுவைகளை சுமந்தவாறு அந்தோனியார் ஆலயம் மற்றும் வீரமுனை சந்தி ஆகியவற்றிலிருந்து நடைபவனி மேற்கொண்டு சம்மாந்துறை சொறிக்கல்முனை பிரதான வீதிவழியாக திருத்தலத்தை சென்றடைந்தனர்..

சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தலத்தின் பங்குத் தந்தை சுலக்சன் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மலையகம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டு தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றினர்.
















# காரைதீவில் இராமகிருஷ்ண மிஷன் குடும்ப சுகாதார நிலையம் திறப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை இராமகிருஷ்ண மிஷன் காரைதீவு சாரதா நலன்புரி நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை குடும்ப சுகாதார நிலையம் திறந்து வைக்கப் பட்டது.

முன்னதாக காரைதீவு கொம்புச் சந்தியில் வைத்து சுவாமிகளுக்கு வர வேற்பு அளிக்கப்பட்டது. அக்கரைப்பற்று சுவாமி விபுலாநந்தர் சிறுவர் இல்ல முகாமையாளர் த. கயிலாயபிள்ளை காரைதீவு விபுலானந்தா ஞாபகார்த்த பணி மன்ற ஆலோசகர் வி.ரி.சகாதேவ ராஜா ஆகியோர் சுவாமிகளுக்கு மாலை சூட்டி பாதநமஸ்காரம் செய்து வர வேற்றார்கள்.

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக இலங்கை ராமகிருஷ்ண மிஷன் தலை வர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மாநந்தா ஜீ மகராஜ் கலந்துகொண்டு பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து நாடாவெட்டி திறந்து வைத்தார்.

வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மாலை ஐந்து மணியிலிருந்து ஆறு மணி வரையான காலப்பகுதியில் இங்கு இலவசமாக சுகாதார சேவை இடம் பெறவுள்ளது.

காரைதீவு வைத்தியர்கள் மற்றும் சுகாதார சேவையாளர்கள் தொண்ட ரடிப்படையில் இங்கு பணியாற்ற முன்வந்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.














# பொத்துவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு

(கே.எ. ஹமீட்)

பொத்துவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சட்டத்தரணி பைசல் முகைதீனின் தலைமையில் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இப்தார் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், முன்னாள் அமைச்சர் எம்.எஸ். உதுமா லெப்பை, பொத்துவில் அமைப்பாளரும், முன்னாள் பொத்துவில் பிரதேச சபை தவிசாளருமான கலாநிதி எம்.எஸ்.ஏ. வாசித் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# தம்பலகாமம் பொலிஸ் நிலைய ஏற்பாட்டில் இன நல்லுறவைப் பேணும் இப்தார் நிகழ்வு

(எச்.எம். ஹலால்தீன்)

தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு பொலிஸ் நிலைய வளாகத்தில் இடம்பெற்றது.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எஸ்.டபிள்யூ.ஆர். பண்டார தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன, தம்பலகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, உலமாக்கள், மௌலவிமார்கள், பௌத்த, இந்து, கிறிஸ்தவ குருமார்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.








# கல்முனை மாநகர் பகுதியில் மெழுகுவர்த்தி போராட்டம்!

## அரசியல்வாதிகள் பங்கேற்பு

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனையில் நேற்று இரவு மெழுகுவர்த்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை வடக்கு பிரதேச தமிழ் மக்கள் அரச சேவைகளை பெறும் அடிப்படை உரிமைகள் தொடர்ச்சியாக திட்டமிடப்பட்டு மாற்றின அரசியல்வாதிகளால் பறிக்கப்பட்டு வருகின்றமையை எதிர்த்து பொதுமக்கள் போராட்டம் இடம் பெற்றது.

அந்த போராட்டத்துடன், இணைந்த வகையில் நேற்று இரவு மெழுகுவர்த்தி போராட்டம் நடாத்தப்பட்டது.

இதன்போது, பிரதேச செயலகத்திற்கு முன்பாக திரண்ட நூற்றுக்கணக்கான மக்கள் மெழுகுவர்த்தி ஏற்றி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அங்கு முதல் தடவையாக அரசியல்வாதிகள் பங்கேற்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான தவராசா கலையரசன், கஜேந்திரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





கடந்த ஆறு நாள்களாக பெருமளவில் பொதுமக்கள் அடையாள அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரச சேவையை பெறும் தங்களின் அடிப்படை உரிமையை பறிக்கும் இனவாத அதிகார அத்துமீறலுக்கு அரசு இடமளிக்ககூடாது. இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் கல்முனை தெற்கு பிரதேச செயலாளருக்கும் இனவாத அரசியல்வாதிகளுக்கும் தங்கள் கண்டனங்களை மக்கள் தெரிவித்து வருகின்றனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அதிகாரங்கள் 30 வருடங்களாக தடுக்கப்பட்டு வருவதுடன், அண்மைக் காலமாக இருக்கும் அதிகாரங்களும் பறிக்கப்பட்டும் வருகின்றன.

பறிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை பெறுவதற்கும் இயங்கிக் கொண்டிருக்கின்ற கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அரச அதிகாரங்களை பெற்று மக்களுக்கான அரச சேவையை பெறுவதற்கு முடியாமல் கடந்த 30 வருடங்களாக தவித்துக் கொண்டிருக்கும் இப் பிரதேச மக்கள் அமைதிப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.













# ஆரையம்பதி பகுதியில் அதிசொகுசு பஸ் விபத்து

(பழுவூரான்)

கொழும்பில் இருந்து அக்கரைப்பற்று நோக்கிப் பயணிகளை ஏற்றி சென்ற அதிசொகுசு பஸ் இன்று அதிகாலை, மட்டக்களப்பு ஆரையம்பதி 4 ஆம் கட்டைப் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது. மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி 4 ஆம் கட்டை பகுதியிலே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன் போது அருகிலுள்ள வர்த்தக நிலையங்கள் சேதமாகியுள்ளன.

இந்த விபத்துச் சம்பவத்தின் போது சாரதி உட்பட்ட பலர் பலத்த காயமடைந்த நிலையில், சிகிச்சைகளுக்காக காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பெண் செயற்பாட்டாளர்களுக்கான செயலமர்வு கல்லடியில் இடம்பெற்றது

(பழுவூரான்)

'கனவு மெய்ப்படுகின்றது' எனும் தொனிப் பொருளில் பெண்கள் செயற்பாட்டாளர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு கல்லடி கிறீன்கார்டின் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

'கனவு மெய்ப்படும்' கருப்பொருளின் ஸ்தாபகர் திருமதி நளினி ராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்த செயலமர்வில், மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் மற்றும் முஸ்லிம் பெண் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது வளவாளராகக் கலந்து கொண்ட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சிவலிங்கம் ஶ்ரீதரன், நடைமுறை வாழ்வியலோடு இணைந்ததாக பெண்களின் சிந்தனை மற்றும் மனப்பாங்கை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை உதாரணங்கள் ஊடாக எடுத்துக் கூறினார்.









# வரலாற்று சிறப்பு மிக்க 'குற்றம் கழுவிய குருதி' உடக்காலான திருப்பாடுகளின் ஆற்றுகை

(மன்னார் நிருபர்)

மன்னார் பேசாலை பங்கு சமூகம் பெருமையுடன் வழங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க 'குற்றம் கழுவிய குருதி ' உடக்காலான திருப்பாடுகளின் ஆற்றுகை நேற்று இரவு 7 மணியளவில் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய பாஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய அருட்பணி பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி உடக்கு பாஸ் நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கலந்து கொண்டார்.

மேலும், மன்னார் மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை அகஸ்ரின் புஸ்பராஜ் அடிகளார், பேசாலை பங்குத் தந்தை அருட்தந்தை எஸ். அன்ரன் அடிகளார், ஆயரின் செயலாளர் அருட்தந்தை கரண் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன், பேசாலை பங்கு சமூகம் உள்ளடங்கலாக பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இதன்போது பேசாலை பங்கு சமூகம் பெருமையுடன் வழங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க 'குற்றம் கழுவிய குருதி ' உடக்காலான திருப்பாடுகளின் ஆற்றுகை சிறப்பாக இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.







# தொண்டர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்கி வைப்பு







(ஏ. எச். ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய தமிழ் பிரதேசங்களில் அமைந்துள்ள பல பாடசாலைகளில் கணினி, கணிதம், அறிவியல் மற்றும் ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர் இல்லாத சூழல் நிலவுகின்றது.

அந்தவகையில், வெருகல் கோட்டத்தில் உள்ள இலங்கைத்துறை முகத்துவாரம் இந்துக் கல்லூரி, திருவள்ளுவர் வித்தியாலயம் மற்றும் துவாரகா வித்தியாலயம், மூதூர் வலையத்தில் உள்ள கங்குவேலி அகத்தியர் வித்தியாலயம், இலிங்கபுரம் தமிழ் வித்தியாலயம் மற்றும் ஆதியம்மன் கேணி தமிழ் வித்தியாலயம், மொறவெவ கோட்டத்தில் உள்ள அவ்வை நகர் தமிழ் வித்தியாலயம், குச்சவெளிக் கோட்டத்தில் உள்ள திரியாய்த் தமிழ் மகாவித்தியாலயம் மற்றும் விவேகானந்தா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு கணிதம், கணினி மற்றும் அறிவியல் கற்பிக்க ஆசிரியர் இல்லை.

இந்த நிலையில், தமிழ் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகக் கல்வித் துறையின் வேண்டுகோளுக்கமைய திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் மேற்படி பாடசாலைகளுக்குத் தொண்டர் ஆசிரியர்களை நியமித்து மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கி வருகின்றது.

இந்த நிலையில், 2024 கல்வி ஆண்டுக்கான மார்ச் மாத கொடுப்பனவு இன்று வழங்கப்பட்டது.

திருக்கோணமலை மாவட்ட நலன் புரிச் சங்கத் தலைவர் திரு.கதிர்வேலு சண்முகம் குகதாசன், கனடா திருக்கோணமலை நலன்புரிச் சங்கத் தலைவர் தங்கவடிவேல் ரகுநாதன், அதன் நிர்வாக உறுப்பினர் க. இலங்கேஷ்வரன் ஆகியோர் இந்தக் கொடுப்பனவுகளை வழங்கினர்.



# கோழி இறைச்சி, முட்டைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை

பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடின்றி வழங்குவதற்காக கோழி இறைச்சி மற்றும் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பண்டிகைக்காலத்தில் 1,000 ரூபாவுக்கு கோழி இறைச்சியினை விற்பனை செய்ய முடியும் என அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

இதனிடையே இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதியை, கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.




# 25 ரயில் சேவைகள் இரத்து

கரையோர மார்க்கத்தில் இன்றைய தினம் 25 ரயில் சேவைகள் இரத்து செய்யப்படுகின்றன என்று ரயில்வே திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளர் என்.ஜே.இந்திபொல தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டி ரயில் நிலையத்திற்கு அருகில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பில் இருந்து வெள்ளவத்தை வரை ஒரு மார்க்கத்தில் மாத்திரம் தொடருந்து சேவை இடம் பெறுவதாகவும் தொடருந்து திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளர் என்.ஜே.இந்திபொல தெரிவித்துள்ளார்.

# மத்திய அரசின் திட்டங்களை தி.மு.க. அரசு தடுக்கின்றது



## பிரதமர் மோடி குற்றச்சாட்டு

"மத்திய அரசின் நல்ல திட்டங்களை மக்களிடம் சென்று சேர விடாமல் தி.மு.க. அரசு தடுத்து நிறுத்துகின்றது என பிரதமர் மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழக பா.ஜ.க. பூத் தலைவர்களுடன் நமோ செயலி வாயிலாக 'எனது பூத், வலிமையான பூத்' என்ற பெயரில் பிரதமர் மோடி நேற்று மாலை கலந்துரையாடினார்.

அப்போது, பா.ஜ.கவின் வெற்றிக்கு பூத் நிர்வாகிகள் செய்திருக்கும் பணிகள் என்ன, ஒவ்வொரு பூத்திலும் மத்திய அரசின் திட்டங்களில் எத்தனை பேர் பயனடைந்துள்ளனர், அவர்களின் விவரங்கள், முதல் முறை வாக்காளர்களின் பட்டியல், மக்களின் மனநிலை, தமிழகத்தில் குடும்ப ஆட்சி குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதா, பெண்கள் வரவேற்கக்கூடிய மத்திய அரசின் திட்டங்கள் எவை என்பது உள்பட தமிழத்தில் ஒவ்வொரு பூத்தின் நிலவரங்கள் குறித்து மோடி ஆலோசனை நடத்தி அவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

இதன்போது பிரதமர் மோடி மேலும் தெரிவிக்கையில்,

"ஒவ்வொரு பூத்திலும் 10 குடும்பங்களுக்கு 3 பேர் பொறுப்பாளர்களாக நியமிக்க வேண்டும். அதில் ஒருவர் கட்டாயம் பெண்ணாக இருக்க வேண்டும். அந்த 10 குடும்பங்களுக்கும் தினமும் சென்று அவர்களுடன் கலந்துரையாடி நட்புறவை வளர்த்துக் கொள்ளுங்கள். 9 கட்சிகள் இணைந்து நவரத்தினங்களாக நமது கூட்டணியில் இருக்கிறார்கள்.

எனவே, ஒவ்வொரு பூத்திலும் தேர்தல் வேலை செய்யும் போது, கூட்டணி கட்சியினரையும் ஒருங்கிணைத்து செய்ய வேண்டும். வெற்றிக்கான ரகசியம் பூத்தில் தான் உள்ளது. ஒவ்வொரு பூத்தையும் வெற்றி பெற்றால் தான், நாடாளுமன்றம் நமக்கு கிடைக்கும். அதிக பிரச்சாரம் செய்வது முக்கியம் அல்ல. அதிக ஓட்டு வாங்குவது தான் முக்கியம்.

நமது கொடியையும், சின்னங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அதற்காக தினமும் ஒரு மணி நேரம் பாஜக மற்றும் கூட்டணி கட்சிகளின் கொடி, சின்னத்துடன் பூத்தில் ஊர்வலம் செல்லுங்கள். அதேபோல், வாக்கு இயந்திரத்தில் சின்னம் எத்தனையாவது இடத்தில் இடம் பெற்றிருக்கிறது என்பதை சொல்லுங்கள்.

தமிழ் மொழி தான் உலகின் மூத்த மொழி, தொன்மையான மொழி, பழமையான மொழி என உலகில் உள்ள ஒவ்வொரு குழந்தைகளுக்கும் தெரிய வேண்டும். அதற்காக இந்த அரசு தொடர்ந்து பாடுபடும். என்னால் தமிழில் பேச முடியவில்லையே என எனது அடிமனதில் வருத்தம் இருக்கிறது. எனக்கு தமிழ் தாய் மொழியாக கிடைக்காதது வருத்தம் தான்.

தேர்தலுக்கு இன்னும் குறைவான நாள்களே உள்ளன. எனவே, 3 நாளுக்கு ஒருமுறை ஒவ்வொரு பிரிவினரையும் அழைத்து அவர்களுடன் சிறப்பு கூட்டங்கள் நடத்த வேண்டும். தமிழக மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள் என ஒவ்வொரு கருத்துக் கணிப்புகளும் தெரிவிக்கிறது. தி.மு.க. அரசின் மீது மக்கள் வெறுப்பின் உச்சத்துக்கு சென்றிருக்கிறார்கள் என தமிழக மக்களை நான் பார்க்கும் போது தெரிகிறது. மத்திய அரசின் நல்ல திட்டங்களை மக்களிடம் சென்று சேர விடாமல், தி.மு.க. அரசு தடுத்து நிறுத்துகின்றனர். தடுத்து நிறுத்த முடியாத திட்டங்களில், அவர்களது ஸ்டிக்கரை ஒட்டுகிறார்கள்.

மொத்த தமிழ்நாட்டையும் வெற்றி பெற்று வர வேண்டும் என நான் அண்ணாமலைக்கு உத்தரவிட்டுள்ளேன். அதனால், தனது தொகுதியில் வேலை செய்வதற்கு அவருக்கு நேரம் இருக்காது. எனவே, அந்த வேலையை பூத் நிர்வாகிகள் தான் கவனித்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, நான் தமிழகத்தில் இருக்கும் பா.ஜ.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் ஒவ்வொருவரையும் அண்ணாமலையாக தான் பார்க்கிறேன். எனவே, அனைத்து வேட்பாளர்களும் வெற்றி பெற்று டெல்லி வர வேண்டும். அண்ணாமலை வெற்றிக்கு பூத் நிர்வாகிகள் உத்தரவாதம் தர வேண்டும்" – என்றார்.

# நடிகர் டேனியல் பாலாஜி மாரடைப்பால் உயிரிழப்பு





பிரபல திரைப்பட நடிகர் டேனியல் பாலாஜி உயிரிழந்துள்ளார்.

மாரடைப்பு காரணமாக கொட்டிவாக்கத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

48 வயதான டேனியல் பாலாஜி காக்க காக்க, வேட்டையாடு விளையாடு, பைரவா, பொல்லாதவன் உள்ளிட்ட பல தமிழ் திரைப்படங்களில் நடித்துள்ளார்.

தமிழ் மட்டுமல்லாது மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழி திரைப்படங்களிலும் இவர் நடித்துள்ளார்.

அவரது மறைவு திரையுலகினரை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. மறைந்த டேனியல் பாலாஜியின் உடல் அஞ்சலிக்காக சென்னை புரசைவாக்கம் வரதம்மாள் காலனியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டது. அங்கு அவரது உடலுக்கு திரைத்துறையினர் மற்றும் ரசிகர்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

முன்னதாக நடிகர் டேனியல் பாலாஜி தனது கண்களை தானம் செய்திருந்தார். புரசைவாக்கத்தில் உள்ள இல்லத்தில் அவரது உடல் வைக்கப்பட்டு இருந்த நிலையில், அங்கே சென்ற மருத்துவர்கள் கண்களை தானம் பெற்றனர்.

இந்த நிலையில், இன்று சனிக்கிழமை மாலை அவரது உடல் ஓட்டேரி பகுதியில் உள்ள அரசு மின் மயானத்தில் தகனம் செய்யப்படுகிறது.

# சிரியா மீது ரஷ்யா நடத்திய வான் தாக்குதலில் 44 பேர் பலி





சிரியா மீது ரஷ்யா நடத்திய வான் வழித் தாக்குதலில் 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

சிரியாவின் அலெப்போரின் புறநகர் பகுதியான, ஜிப்ரீனில் இஸ்ரேல் நேற்று வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது.

அலெப்போ சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

லெபனானைச் சேர்ந்த ஹிஸ்புல்லா ஆயுதப் படையினரின் ஏவுகணை தளங்களை குறிவைத்து, தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

தாக்குதலில் 36 சிரிய இராணுவத்தினர், 07 ஹிஸ்புல்லா படையினர் மற்றும் ஈரான் ஆதரவு ஆயுதக் குழுவை சேர்ந்த ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

## செனகலில் ஜனாதிபதியானார் பஸ்ஸிரோ டியோமயே பயே




செனகல் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிக் கட்சி வேட்பாளர் பஸ்ஸிரோ டியோமயே பயே வெற்றி பெற்றுள்ளார்.

இந்த நிலையில் அவர் நாட்டின் ஐந்தாவது ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

செனகல் ஜனாதிபதி தேர்தலில் ஆளந்தரப்பு வேட்பாளர் அமடோ பா 35 வீத வாக்குகளை மாத்திரமே பெற்றிருந்த நிலையில் எதிர்த்தரப்பு வேட்பாளர் பஸ்ஸிரோ டியோமயே பயே 54 வீத வாக்குகளை பெற்றிருந்தார்.

இந்த நிலையில் செனகலின் புதிய ஜனாதிபதியாக பஸ்ஸிரோ டியோமயே பயே எதிர்வரும் ஏப்ரல் இரண்டாம் திகதி பதவியேற்கவுள்ளார்.

## பெண் கைதிகளின் பாதங்களை கழுவி முத்தமிட்டார் போப் பிரான்சிஸ்



ஈஸ்டர் தவக்காலத்தையொட்டி போப் பிரான்சிஸ், பெண் கைதிகளின் பாதங்களை கழுவி முத்தமிட்டுள்ளார்.

நேற்று இரவு ரோம் நகரில் உள்ள சிறைச்சாலையில் உள்ள, 12 பெண் கைதிகளின் பாதங்களை போப் பிரான்சிஸ் கழுவியுள்ளார்.

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு முதல் நாள், தனது 12 சீடர்களுக்கு திருவிருந்து அளித்து அவர்களது பாதங்களை கழுவியதை, நினைவு கூரும் விதமாகவே இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

12 பெண் கைதிகளின் பாதங்களை கழுவிய பின்னர், போப் பிரான்சிஸ் கைதிகளின் பாதங்களுக்கு முத்தமிட்டுள்ளார்.

வழக்கமாக இதற்கு முன்னர் போப் ஆக பதவி வகித்தவர்கள், வத்திக்கான் தேவாலயத்தில் இந்த நிகழ்வினை கடைபிடிப்பதை வழக்கமாக கொண்டிருந்தனர்.

எனினும் இதனை மாற்றி போப் பிரான்சிஸ், முதன் முறையாக சிறையில் இந்த புனித சடங்கை நடத்தி உள்ளார்.

பக்கங்கள் - 5

# கனடா முரசு

சனிக்கிழமை 30/03/2024

## முறைகேடுகளில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரி நீக்கம்

ஒன்ராரியோ, மார்ச் 30

சைக்கிளோட்டி ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் குற்றம் நிரூபிக்கப்பட்ட சம்பவம் உட்பட பணியிடத்தில் பல முறைகேடு

C2

# ஏப்ரல் 8இல் முழு சூரிய கிரகணமன்று

# நயாகராவில் ஒரு லட்சம் பேர் கூடுவர்!

## அதனால் அங்கு அவசரகால நிலை பிரகடனம்



ஒன்ராரியோ, மார்ச் 30

**ஒன்ராரியோவின் நயாகரா பிராந்தியம் ஏப்ரல் தொடக்கத்தில் சூரிய கிரகணத்திற்கு ஒரு மில்லியன் பார்வையாளர்களை வரவேற்கத் தயாராகி வருவதால் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளது.**

**ஏப்ரல் 8ஆம் திகதி முழு சூரிய கிரகணம் ஒன்ராரியோயவை அடையவுள்ள நிலையில், அதைப் பார்க்க சிறந்த இடங்களில் ஒன்றாக நயாகரா நீர்வீழ்ச்சியை நேஷனல் ஜியோகிராஃபிக் சேனல் அறிவித்தது.**

ஒரே நாளில் தனது நகரம் இதுவரை கண்டிராத அதிக பார்வையாளர்களை எதிர்பார்ப்பதாகக் மார்ச் மாத தொடக்கத்தில் நயாகரா நீர்வீழ்ச்சியின் மேயர் ஜிம் டியோடாட்டி கூறியிருந்தார்.

நயாகராவின் நகர சபை நிகழ்விற்குத் தயாராக அவசரகால நிலையை அறிவித்துள்ளது.

வியாழன் அன்று அறிவிக்கப்பட்ட பிரகடனம், பெரிய போக்குவரத்து நெரிசல்கள், அவசரகால சேவைகள் மற்றும் செல்போன் நெட்வொர்க் ஓவர்லோடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சில கூடுதல் திட்டமிடல் கருவிகளை இயக்குகிறது.

# ஃபெராரி காரைக் கடத்திய 16 வயதுச் சிறுவன் கைது!




ஒன்ராரியோ, மார்ச் 30

வியாழன் மாலை, பிராம்ப்டன் இல்லத்தின் டிரைவ்வேயில் ஃபெராரி காரை வன்முறையாகக் கடத்தினான் எனக் கூறப்படும் 16 வயது சிறுவன் பல குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறான்

இரவு 8 மணியளவில், கிராமப்புற டிரைவ் மற்றும் ஏர்போர்ட் ரோடுக்கு அருகில் அடையாளம் தெரியாத எண்ணிக்கையிலான மக்கள் தங்கள் வாகனத்தில் நின்று கொண்டிருந்தபோது, துப்பாக்கியுடன் ஒரு நபர், மேலும் இரண்டு அடையாளம் தெரியாத சந்தேக நபர்களுடன் எதிர்கொண்டதாக பீல் பிராந்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, சந்தேக நபர்கள் பணம், செல்போன்கள் மற்றும் பாதிக்கப்பட்டவரின் வெள்ளை 2018 ஃபெராரி ஸ்பைடரின் சாவியைக் கோரியுள்ளனர்.

பின்னர், ஆயுதம் ஏந்திய சந்தேக நபர் ஃபெராரி காரின் உள்ளே நுழைந்து ஓட்டிச் சென்றார் எனவும், அடையாளம் தெரியாத மற்ற இரு சந்தேக நபர்களும் ஓடி விட்டனர் எனவும் விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

C2




# நிலக்கரியின் பாவனையை நிறுத்துவதாக கூறியபடி ஏற்றுமதியை அதிகரித்த கனடா

ஒன்ராரியோ,மார்ச்30

கனடாவின் வெப்ப நிலக்கரி ஏற்றுமதி 2023ஆம் ஆண்டில் ஏழு சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

கடந்த ஒரு தசாப்த காலத்தில் அதிகளவு ஏற்றுமதி பதிவான வருடமாக 2023ஆம் ஆண்டு உள்ளது.

மின்சாரம் தயாரிப்பதற்காக எரிக்கப்படும் நிலக்கரியின் ஏற்றுமதியில் ஏற்றம், வீடு உட்பட உலகளவில் நிலக்கரியை சக்தி ஆதாரமாக பயன்படுத்துவதை நிறுத்துவதில் கனடா முன்னணியில் உள்ளது.

2030க்குள் கனடாவில் இருந்து அனைத்து வெப்ப நிலக்கரி ஏற்றுமதியும் நிறுத்தப்படும் என்று ஆளும் லிபரல் கட்சியினர் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு உறுதியளித்தனர்.

ஆனால் அந்த வாக்குறுதி அளிக்கப்பட்டதிலிருந்து ஏற்றுமதி கிட்டத்தட்ட 20 சதவீதம் உயர்ந்துள்ளது.

வென்கூவர் மற்றும் பிரின்ஸ் ஷரூபர்ட் துறைமுகங்களால் இந்த மாதம் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்கள், கடந்த ஆண்டு 19.5 மில்லியன் தொன் வெப்ப நிலக்கரி தங்கள் முனையங்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இது 2022இல் 18 மில்லியன் தின்களுக்கும் சற்று அதிகமாக இருந்தது மற்றும் 2015இல் லிபரல் கட்சி ஆட்சிக்கு வந்தபோது கனடா ஏற்றுமதி செய்த தொகையை விட இரு மடங்கு அதிகமாகும்.

# ஸ்காபரோவில் கத்திக் குத்து சந்தேகநபர் உடனேயே கைது

ஒன்ராரியோ,மார்ச்30

மார்ச் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஸ்காபரோவில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

வெஸ்ட் ஹில் பகுதியில் கிங்ஸ்டன் மற்றும் காலோவே சாலைகளுக்கு அருகில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பிற்பகல் 2:24 மணியளவில் அந்தப் பகுதிக்கு தாங்கள் அழைக்கப்பட்டனர் என டொராண்டோ பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபருக்கு உயிருக்கு ஆபத்தான காயங்கள் ஏற்பட்டன எனவும், மருத்துவமனைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஃபெராரி...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் முதலில் வந்த மற்றொரு திருடப்பட்ட வாகனத்தை அவர்கள் விட்டுச் சென்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, அதிகாரிகள் திருடப்பட்ட ஃபெராரியை ஸ்காபரோவில், ஃபின்ச் அவென்யூ ஈஸ்ட் மற்றும் நீல்சன் சாலைக்கு அருகில் கண்டுபிடித்தனர்.

முதலாவது சந்தேக நபரான பிரம்டன் பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுவன், அப்போது கைது செய்யப்பட்டுள்ளான்.

முறைகேடுகளில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழக்குகளில் சிக்கிய டொரான்டோ பொலிஸ் அதிகாரி ஒருவர் பணி நீக்கம் செய்யப்பட உள்ளார்.

2008ஆம் ஆண்டு முதல் பொலிஸில் கடமையாற்றிய டக்ளஸ் ஜேசன் ஹோம்ஸ் பல சந்தர்ப்பங்களில் பொது நம்பிக்கையை மீறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மதிப்பிழந்த நடத்தை மற்றும் இரண்டு கீழ்ப்படியாமை தொடர்பில் டக்ளஸ் ஹோம்ஸ் குற்றவாளி என அடையாளங் காணப்பட்டுள்ளார்.

டக்ளஸ் ஹோம்ஸ் அந்த நேரத்திற்கு முன் பதவி விலகாவிட்டால், இந்த தீர்ப்பு திகதியிலிருந்து ஏழு நாள்களுக்குள் டொராண்டோ பொலிஸ் சேவையிலிருந்து நீக்கப்படல் வேண்டும் என அவருக்கான தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குணம்ஸ் சூப்பர் மார்க்கட்

GSM — குணம்ஸ் சுப்பர்மார்க்கட் — GUNAAM SUPERMARKET

## GUNAAM'S SUPER MARKET

# Super Deal of this Week

## till March 31st




LOWEST PRICE 8.99$ Only at GUNAAM'S SUPER MARKET

LOWEST PRICE 9.99$ Only at GUNAAM'S SUPER MARKET


4 Niru Tin fish




LOWEST PRICE 8.99$ Only at GUNAAM'S SUPER MARKET




LOWEST PRICE LB 7.99$ Only at GUNAAM'S SUPER MARKET



ஊர் ஆட்டிறைச்சி

LOWEST PRICE 7.99$ Only at GUNAAM'S SUPER MARKET



ஊர் கோழி

## Gunaam's super market
## Good Fridayஐ முன்னிட்டு தரும் Super Deal

| | |
|---|---|
| Chocalate Swiss Roll | - $ 3.99 |
| Maharaja Rice Flour | - $8.99 |
| Maharaja Basmati Rice | - $13.99 |
| BaBa Uppuma | - $2.99 |
| Nestum Serial | - $5.99 |
| MR Goudas Coconut Powder 3 For | - $10.00 |
| NIRU Tin Fish 4 For | - &10.00 |
| AROY - D Coconut Milk Tin 4 For | - $10.00 |
| NIRU 8 1b Mysoor Dool | - $7.99 |
| NIRU 10 1b Proboiled Rice | - $8.99 |

| | |
|---|---|
| NIRU அவித்த மா | - $8.99 |
| கத்தரிக்காய் | - $1.49 1b |
| Drumstick | - $4.99 1b |
| Small onion | - $5.99 1b |
| Rasavalli | - &5.99 1b |
| US CRAB Box | - $18.99 |
| இறால் | - $3.99 1b |
| சுறா | - $5.99 1b |
| திரளி | - $5.99 1b |
| காட்டுப் பன்றி | - $5.99 1b |
| முழு King Fish | - $6.99 1b |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998

# பழைய பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் குறித்து விசாரணை

## பொதுமக்களின் உதவியை கோரும் பொலிஸ்

ஒன்ராரியோ, மார்ச் 30

பல தசாப்தங்களுக்கு முந்தைய வரலாற்று பாலியல் வன்கொடுமை வழக்குகள் தொடர்பாக பீல் பிராந்திய பொலிஸார் பொதுமக்களின் உதவியை கோருகின்றனர்.

இந்த மாத தொடக்கத்தில், பீல் பொலீஸ், ஹோல்டன் பிராந்திய பொலீஸ் மற்றும் வோட்டர்லூ பிராந்திய பொலீஸ் சம்பந்தப்பட்ட 'ப்ராஜெக்ட் வூட்லேண்ட்' என்று அழைக்கப்பட்ட கூட்டுப் படைகள் விசாரணையில் 64 வயதான ரிச்சர்ட் நீல், 1992 மற்றும் 1995 க்கு இடையில் இரண்டு சிறுவர்கள் மற்றும் ஒரு பெண் மீது மூன்று வெவ்வேறு தாக்குதல்கள் தொடர்பாக – கடத்தல் மற்றும் ஆயுதம் மூலம் பாலியல் வன்கொடுமை உட்பட – 20 குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார்.





இவரால் மேலும் பலர் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று நம்புவதாக பொலிஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவரங்களைக் கோரி, கைது செய்யப்பட்ட பிறகு முதல் முறையாக நீலின் புகைப்படத்தை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.




# 'டவுன்டவுன் டொராண்டோ பார்' 200 வருடங்களின் பின் மூடுவிழா


ஒன்ராரியோ,மார்ச்30

சுமார் 200 வருட வணிகத்திற்குப் பிறகு, வரலாற்றுச் சிறப்புமிக்க டவுன் டவுன் டொராண்டோ பார் அடுத்த வாரம் அதன் கதவுகளை மூடுகிறது.

298 குயின் ஸ்ட்ரீட் வெஸ்டில் டவுன்டவுனின் மையப்பகுதியில் அமைந்துள்ள பிளாக் புல் டேவர்ன், 1833 முதல் செயற்பட்டு வருகின்றது.

வெள்ளிக்கிழமை ஒரு சமூக ஊடக இடுகையில், உணவகம் அதன் வரவிருக்கும் மூடல் ஒரு சகாப்தத்தின் முடிவை எவ்வாறு குறிக்கிறது என்பதைப் பகிர்ந்து கொண்டது.






# டிக்டொக் மீதான தடை கனடியர்கள் வரவேற்பு!

ஒன்ராரியோ, மார்ச் 30

டிக்டொக் என்ற சமூக ஊடக செயலியை தடை செய்ய 51 சதவீத கனடியர்கள் ஆதரவளித்துள்ளனர் என புதிய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த மாதத் தொடக்கத்தில் அமெரிக்காவில் பிரேரணை நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து டிக்டொக்கின் தேசிய பாதுகாப்பு மதிப்பாய்வுக்கு கனடா உத்தரவிட்டுள்ளது.

மார்ச் 23 முதல் 25 வரை நடத்தப்பட்ட 1,605 கனடியர்களின் கருத்துக் கணிப்பின்படி, பதிலளித்தவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர், 28 சதவீதம் பேர் தடையை எதிர்க்கின்றனர் எனக் கூறினர்.

டிக்டொக்கைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புள்ள இளைய கனடியர்கள், தங்கள் பழைய சகாக்களை விட தடையை ஆதரிப்பது குறைவு.

18 முதல் 34 வயதுக்குட்பட்டவர்களில் பாதி பேர் டிக்டொக்கில் இருக்கின்றனர் எனவும், 55 வயதுக்கு மேற்பட்டவர்களில் 12 சதவீதம் பேர் கருத்துக்கணிப்பில் உள்ளனர் எனவும் தெரிவித்தனர்.

இளைய கனேடியர்களில், 42 சதவீதம் பேர் தடைக்கு ஆதரவாக உள்ளனர்.

## 17,19 வயதுடைய இருவரின் மீது கொலைக் குற்றச்சாட்டுப் பதிவு



ஒன்ராரியோ, மார்ச் 30

கடந்த மாதம் நகரின் மேற்கு முனையில் நடந்த துப்பாக்கிச் சூடு தொடர்பாக 17 வயது சிறுவனையும் 19 வயது இளைஞனையும் டொராண்டோ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் பெப்ரவரி 6 அன்று, அதிகாலை 1:30 மணிக்கு, லொன்ஸ்டவுன் அவென்யூ மற்றும் ப்ளூர் ஸ்ட்ரீட் மேற்குக்கு அருகில் உள்ள ப்ளோர்டேல் பகுதியில் நடந்தது.

மார்ச் 29ஆம் திகதி, மொன்ட்ரியலைச் சேர்ந்த 19 வயது மற்றும் 17 வயதானஇருவர் மீதும் இரண்டாம் நிலை கொலைக் குற்றச்சாட்டைப் பதிவு செய்துள்ளதாக பொலிஸார் அறிவித்தனர்.

19 வயதுடைய இரு சந்தேக நபர்களின் படங்களை புலனாய்வாளர்கள் பகிர்ந்து கொண்டனர். அவர்கள் இருவரும் துப்பாக்கிச் சூடு தொடர்பாக இரண்டாம் நிலை கொலைக்காக தேடப்பட்டு வருகின்றனர்.

## கத்திக் குத்துக் கொலை; ஒருவர் கைதாகிக் காவலில்




ஒன்ராரியோ, மார்ச் 30

மார்ச் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நோர்த் யோர்க்கில் உள்ள அடுக்குமாடி கட்டடத்தில் கத்தியால் குத்தப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒருவர் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என டொரான்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெஸ்டன் ரோட் மற்றும் ஷெப்பர்ட் அவென்யூ வெஸ்ட் அருகே உள்ள குடியிருப்புக் கட்டடத்தில் காலை 7 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்த போது, கட்டடத்திற்கு வெளியே ஒரு நபர் கத்தியால் குத்தப்பட்ட நிலையில் கண்டுபிடித்துள்ளனர்.

காயங்களுடன், வைத்திசாலைக்கு கொண்ட செல்லப்பட்ட நபர், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.